**கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை – 2022**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையினதும் அதன் விவசாயிகள் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டத்தினதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் மற்றும் அதன் தொகுதியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை மற்றும் அதன் தொகுதியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் மற்றும் அதன் தொகுதியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும
2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடல்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் மற்றும் அதன் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும்

நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் மற்றும் அதன் தொகுதியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம்

#### 1.5.1.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடானான இணக்கமின்மைகள்

| **உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
| --- | --- | --- |
| இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர்களின் பொறுப்புக்கள் காலரீதியாக காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ச்சியாக காப்பீட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஓய்வூதிய பொறுப்புக்கள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்ட ஓய்வூதிய பொறுப்பு ரூபா 82,435,153,268 ஆகும். மேலும் நிதியத்தினால் இக்கடப்பாட்டினை தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்தின் ஓய்வூதிய பொறுப்பு காப்பீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்காததுடன் சுய நிதியினை அடிப்படையாகக் கொண்டு அமுல்ப்படுத்தக்கூடிய புதிய திட்டம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பழைய திட்டத்தின் கொடுப்பனவுகள் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டினூடாக வருடாந்தம் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் புதிய ஓய்வூதிய திட்டத்தின் காப்பீட்டு மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்கின்ற சந்தர்ப்பத்திலேயே பழைய திட்டதினதும் காப்பீட்டு மதிப்பீட்டினைப் | ஓய்வூதிய பொறுப்பானது காலரீதியாக மேற்கொள்ளப்படுகின்ற காப்பீட்டு மதிப்பீட்டின் மூலம் கணிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் கடப்பாடுகளைத் தீர்த்துவைப்பதற்கு போதியளவு முதலீடு பேணப்படுதல் வேண்டும். |

|  |  |  |  |
|---|---|---|---|
|  |  | பெற்றுக்கொள்ளல் இடம்பெறுகின்றது. |  |

### 1.5.1.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

|  | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்படுகின்ற பங்களிப்பாளர்களிடமிருந்து கணக்காண்டிற்காக கிடைக்க வேண்டிய பங்களிப்பு பணத்தின் பெறுமதியை இனங்காண்பதற்கு முடியுமான வகையில் ஓய்வூதிய திட்டத்திற்காக சேர்ந்த திகதி மற்றும் உரிமை கோரும் திகதியை உள்ளடக்கி பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியலானது தவணைப்பண பெறுவனவுகளை உள்ளடக்கி முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்காததனால் பங்களிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமானது அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் ரூபா 13,420,221 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பங்களிப்பாளர்களின் தகவல்களை கணனி முறைமையினூடாக பெற்றுக்கொள்ளலாம். தாமதித்த தவணைப் பணங்களை கணனிமயப்படுத்துவதிலுள்ள தாமதத்தினால் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் செயற்பாடற்ற பங்களிப்பாளர்களை முறைமையினூடாக பெற்றுக்கொள்ள முடியாது. அதனால் தாமதித்த தவணைப் பணங்களை சுயமாகவே கணனி மயப்படுத்துவதற்கான ஒரு வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பங்களிப்பாளர்களின் பெயர்ப்பட்டியல் நாளதுவரையாகப் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் விவசாயிகள் ஓய்வூதியத்தினை செலுத்துவதற்காக பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,968,000,000 பணத்தில் ரூபா 3,918,881,123 தொகையை செலுத்தியதன் பின்னர் மிகுதிப்பணமாகிய ரூபா 49,118,877 தொகை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்காததுடன் அது மீளச் செலுத்த வேண்டிய பணமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் ஓய்வூதிய செலவு ரூபா 4,053,000,000 ஆக இருந்ததுடன் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3,998,000,000 முழுப்பணமும் செலுத்தப்பட்டுள்ளது. வருமானக் கூற்றில் காட்டப்படுவதாவது அந்த மொத்த செலவில் பங்களிப்பாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாது மீளக் கிடைத்த பணத்தை கழித்ததன் பின்னரான பெறுமதியாகும். இதற்கிணங்க திறைசேரிக்கு செலுத்த வேண்டிய மீதி இல்லை. | பங்களிப்பாளர்களுக்கு செலுத்தப்படாத பணம் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவுகளிலிருந்து உரிமை கோரப்படாத ரூபா 167,470,484 தொகையானது | 2022 ஆம் ஆண்டில் ரூபா 167,470,484 தொகையான உரிமை கோரப்படாத ஓய்வூதிய | பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வூதியத்தினை செலுத்த வேண்டியவையாக |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளுக்கு மீளச் செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாது திட்டத்தின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பணமானது ஓய்வூதிய செலவில் கழித்துக் காட்டப்பட்டுள்ளது. நீண்டகாலமாக ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளாத பங்களிப்பாளர்களின் ஓய்வூதியத்தினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் இந்த உரிமை கோரப்படாத பணம் பெறவேண்டிய ஓய்வூதியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2019 சனவரியிலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் ரூபா 4,435,400 தொகையான உரிமை கோரப்படாது பெற்றுக்கொள்ளப்பட்ட தேறிய தவணைப் பணம் மற்றும் மாதாந்த பலவீன கொடுப்பனவுக்கான 612 காசோலைகள் நி.பி 396(ஈ)(iii) இன் பிரகாரம் செலுத்த வேண்டியுள்ள ஒரு கடனாக பதிவுசெய்யப்படாது அந்த அந்த ஆண்டின் போது வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | காலங்கடந்த காசோலைகள் ஏடுகளில் பதியப்பட்டு வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளல் இடம்பெறுவதுடன் கிடைக்கின்ற வேண்டுதல்களுக்கு இணங்க மீண்டும் காசோலைகள் வழங்கப்படும். | உரிமை கோரப்படாத ஓய்வூதியங்களை செலுத்த வேண்டிய கடன் மீதியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் நிருவாக செலவுகளுக்காக திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 190,000,000 தொகை விவசாயிகள் ஓய்வூதிய நிதியத்தின் வங்கி கணக்கிற்கு செலவுவைக்கப்படாது கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் வங்கி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு அதிலிருந்து செலவு செய்யப்பட்டு நடைமுறை கணக்கின் மூலம் அக்கொடுக்கல் வாங்கல்கள் நிதியத்தின் பேரேட்டில் பதியப்பட்டிருந்தது. | விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு திறைசேரியிடமிருந்து கிடைத்த பணத்தை வழங்குவதற்கான பட்டியல்படுத்தப்பட்ட கணக்கானது இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் சபையின் 164667 ஆம் இலக்க கணக்காகும். அந்த கணக்கிற்கு கிடைக்கின்ற உரிய பணம் நடைமுறைக் கணக்கினூடாக விவசாய காப்புறுதி திட்டத்திலிருந்து விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு மாற்றம் செய்யப்படும். | திறைசேரியிடமிருந்து கிடைக்கின்ற பணத்தை திட்டத்தின் வங்கி கணக்கிற்கு பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது இத்திட்டம் தொடர்பாக சட்ட ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் இல்லாதிருந்த போதிலும் கமத்தொழில் மற்றும் கமநல | சபையின் சட்டச் செலவுகளில் 60 சதவீதம் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டது. எனினும் | திட்டத்திற்குரிய சட்டச் செலவுகளை மாத்திரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காப்புறுதிச் சபையின் சட்டச் செலவில் 60 சதவீதத்திற்குச் சமனான ரூபா 1,348,623 தொகை இத்திட்டத்தின் சட்டச் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இச்சதவீதத்தினை தீர்மானித்த அடிப்படையானது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டவாறு சட்டச் செலவுகளை மீண்டும் மீளாய்வு செய்து இத்திட்டத்தின் சட்ட செலவுகளை மாத்திரம் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் செலவுகளைப் பகிர்வதற்கு தொடர்புபடுத்தப்பட்ட அனைத்து செலவு கணக்குகளும் திருத்தம் செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | விவசாயிகள் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம், கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன் திட்டம், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை ஆகிய மூன்று கணக்கு அலகுகளும் இணைந்து செயற்பட்டிருந்தும் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் நிருவாகச் செலவுகளில் 50 சதவீதம் மற்றும் ஏனைய செலவுகளில் 20 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையான உயர்ந்த சதவீதம் விவசாயிகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தது. அந்த விகிதங்களின் நியாயத்தன்மையைப் பரீட்சிப்பதற்காக விகிதத்தினை தீர்மானித்த அடிப்படை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் இருக்கின்ற ஆளணியினர் பொதுவாகவே சேவையில் ஈடுபடுத்தப்படுவதனால் இவ்வாறு விகிதாசாரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் இந்த விகிதாசாரத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலவுகளை உள்ளீர்க்கும் விகிதாசாரம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.˙. |

**1.5.1.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 1,516,033,327 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூபா 87,508,723,633 ஆகவும் இருந்ததுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 85,992,690,306 ஆகும். இந்த | விவசாயிகள் ஓய்வூதிய பொறுப்பு வருடாந்தம் அதிகரிப்பதுடன் திட்டத்தினுள் முதலீடுகள் இல்லாமையும் இந்த திட்டத்தின் தவணைப்பணத்தினை | திட்டத்தினை செயற்பாடுள்ளதாகக்கு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| சாகமற்ற நிலைமையானது திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருப்பது தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | அதிகரிக்காது பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் கொள்கையினால் பிரதிபலன்களை அதிகரித்ததன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளதுடன் ஒவ்வொரு ஆண்டிலும் அரசாங்கத்தின் பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகள் ஓய்வூதியம் செலுத்துதல் இடம்பெற்று வருகின்றது. |

### 1.5.1.4 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தபால் திணைக்களத்தின் மாவட்ட கணக்கு அலுவலகங்களிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ள வேண்டியுள்ள உரிமை கோரப்படாத ரூபா 47,102,835 தொகையான ஓய்வூதிய பணத்தின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்கு முடியுமான வகையில் சபையினால் ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | விவசாயிகள் ஓய்வூதிய கொடுப்பனவு நடைமுறையானது தபால் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. செலுத்தப்படாத ஓய்வூதியமானது உரிய மாதத்திற்கு அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொரோனா தொற்றுநொய் நிலைமை மற்றும் சச்சரவான நிலைமையின் அடிப்படையில் சில தாமதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் தற்பொழுது அந்த தாமதங்களை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படாத ஓய்வூதியத்தின் ஆவணங்களை சபைக்கு அனுப்புமாறு மாவட்ட கணக்காளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிமை கோரப்படாத பணம் தொடர்பான தகவல்கள் முழுமையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படுதல் வேண்டும். |

**1.5.2 கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள்**

**1.5.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தளபாடமும் பொருத்திகளும் அலுவலக உபகரணங்கள், கணனிகள் போன்ற ரூபா 696,175 பெறுமதியான முழுமையாக பொறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தும் அவற்றை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தளபாடங்களும் பொருத்திகளும், கணனி துணைக்கருவிகள், அலுவலக உபகரணங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டிருந்தும் அவற்றினை மதிப்பீடு செய்து வினைத்திறனான ஆயுட் காலத்தை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. பல சொத்துக்கள் அகற்றப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் கணனி போன்ற உபகரணங்களை நாளதுவரையாக்கக் கூடிய நிலையில் காணப்பட வில்லை. இச்சொத்துக்கள் முழுமையான வினைத்திறனுடனும் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதனால் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் இத்திட்டத்தின் செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிய பொறுப்பிற்காக காப்பீட்டு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த காப்பீட்டு மதிப்பீடானது மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அத்திகியில் உள்ளவாறான செயற்படுகின்ற பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்புக்கள் ரூபா 5,068,050,746 ஆகும். | காப்பீட்டு மதிப்பீட்டினை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அது பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய பொறுப்பினை காப்பீட்டு மதிப்பீட்டிற்கு இணங்க கால ரீதியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |

#### 1.5.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழில் ஓய்வூதிய திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்த ஆளணியினர் இல்லாதிருந்தும் சபையின் தலைவரின் தனிப்பட்ட செயலாளர், தம்புத்தேகம மாவட்ட அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் மற்றும் மன்னார் மாவட்ட அலுவலகத்தின் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஆகியோரை சேவையில் ஈடுபடுத்தி அந்த மூவருக்கும் சம்பளமாக மொத்தமாக ரூபா 2,209,812 செலுத்தி திட்டத்தின் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்திட்டத்தின் கடமைகளுக்காகவே இந்த உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். தற்பொழுது ஏனைய கடமைகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் இத்திட்டத்தில் கடமையாற்றுகின்றார்கள். இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவு ஆளணியினரை சேர்த்துக் கொண்டதன் பின்னர் திட்டத்திற்கு உரிய ஊழியர்களின் சம்பளத்தை திட்டத்திற்கு உள்ளீர்ப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்களைகளை சேர்த்துக் கொள்ளாமலும் சம்பளம் கொடுப்பனவு செய்யாமலும் இருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிற்கு முன்கொண்டுவரப்பட்ட ரூபா 98,000 தொகையான கடற்றொழிலாளர் மரணப்பணிக்கொடை நிதியத்தின் செலுத்த வேண்டிய மீதி 2020 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் அந்த தீர்த்துவைத்தலினை பிழையாக கணக்கு வைத்ததனால் மீதி மீளாய்வாண்டின் பேதும் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | இப்பணத்தை மரணப் பணிக்கொடை நிதியத்திலும் கடற்றொழில் ஓய்வூதிய நிதியத்திலும் செம்மையாக்கல் செய்வதற்கு 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இடம்பெற்றுள்ள பிழை உடனடியாக சரிசெய்யப்படுதல் வேண்டும். |

#### 1.5.2.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 663,412,060 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூபா 5,140,628,886 ஆகவும் காணப்பட்டதுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 4,477,216,826 ஆகும். இந்த பாதகமான நிலையானது திட்டம் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | இத்திட்டம் சுய நிதியின் அடிப்படை அமுல்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தினை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உள்ளீர்க்கப்படுவதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் செலுத்த வேண்டிய ஓய்வூதிய, பொறுப்பு | திட்டத்தினை செயற்பாடுள்ளதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகரித்துச் செலவதுடன் அதனால் தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடைகின்றது. அதன் காரணமாக இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளலும் செய்யப்படவில்லை. | |

**1.5.3 சபையின் நிதிக்கூற்றுக்கள்**

**1.5.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

| | **உரிய நியமங்களுடனான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் வினைத்திறனான ஆயுள் காலத்தினை மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 33,415,830 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறன் ஆயுள் காலம் தொடர்பான மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்து சரியான இயலளவு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரலாற்றுக் கிரயத்தின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ள முழுமையாக பெறுமானத் தேய்வு செய்துள்ள சில சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தும் முழுமையாக பயன்படுத்த முடியாத சொத்துக்களும் காணப்பட்டன. அச்சொத்துக்களை எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வினைத்திறன் ஆயுள் காலத்தை மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மானியமானது நியாயமான உறுதிப்படுத்தல் கிடைக்கும் வரை வருமானமாக இனங்காணப்படாதிருக்க வேண்டிய போதிலும் திறைசேரியின் உறுதிப்படுத்தல் இல்லாது கமத்தொழில் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்தினால் வடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டு இணைய தளத்தில் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள இலவசமான காப்புறுதியின் கீழ் உள்ளடக்கப்படுகின்ற பயிர்ச்செய்கை காணிகளின் ஏக்கர் அளவினை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டு ஒரு | 2018 பாதீட்டில் 6 வகையான பயிர்களுக்காக ரூபா 40,000 உச்ச அளவு இழப்பீட்டினை வழங்குவதற்கும் கண்டிப்பான பயிர்ச்செய்கை காப்புறுதிக்காக ஒரு ஏக்கருக்கு ரூபா 675 வீதம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இத்திட்டத்திற்கான தவணைப்பணத்தினை கணக்கீடு செய்வதானவு மேற்கூறிய பாதீட்டிற்கு மற்றும் அங்கீகரித்த அமைச்சரவை பத்திரத்திற்கு | நியாயமான உறுதிப்படுத்தல் கிடைக்கும் வரை அரசாங்க மானியம் வருமானமாக இனங்காணப்படாதிருத் தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஏக்கருக்கு ரூபா 675 தவணைப் பணம் வீதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான தவணைப்பண வருமானம் ரூபா 4,249,619,152 தொகை திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் அட்டுறு அடிப்படையில் காட்டப்பட்டிருந்தது. அப்பெறுமதி திரண்ட நிதியத்தின் 62 சதவீதமானதுடன் அப்பணம் முழுவதும் சபைக்கு கிடைப்பதானது நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது. | இணங்கியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டளவில் சபைக்கு கிடைக்க வேண்டிய தவணைப் பணமாக ரூபா 4.249 மில்லியன் பணம் காணப்பட்டது. |

### 1.5.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மஹஹியங்கனை, எம்பிலிபிடிய, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 3 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 76.6 பேச்சர்ஸ் அளவான மூன்று காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மாவட்ட உதவி பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் துரிதமாக நடவடிக்கையை முடிவுறுத்தி மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் செயற்படுத்தப்படுகின்ற கடற்றொழிலாளர் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் நிருவாகச் செலவுகளுக்காக திறைசேரியினால் வழங்கிய அரசாங்க மானியம் ரூபா 1,500,000 திறைசேரியிடமிருந்து பெற்ற பணமாக காட்டப்படாது தொகுதியின் நிதிக்கூற்றுக்களில் பிழையாக ஏனைய வருமானமாகக் காட்டப்பட்டிருந்தது. | கடற்றொழில் ஓய்வூதித் திட்டத்திற்காக கடற்றொழில் திணைக்களத்தின் மூலம் கிடைத்த ரூபா 1,500,000 பணம் நேரடியாக சபைக்கு பொதுத்திறைசேரியிடமிருந்து கிடைக்காததனால் ஏனைய வருமானத்தினுள் காட்டப்பட்டுள்ளது. | அரசாங்க மானியமானது திறைசேரியிடமிருந்து பெற்ற பணமாகக் காட்டப்படுதல் வேண்டும். |
| (இ) | சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனத்துடன் (IFC) ஒன்றிணைந்து விவசாய காப்புறுதி திட்டங்களின் வினைத்திறனான அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் இலங்கையின் விவசாயக் காப்புறுதியினை அதிகரிக்கச் செய்யும் குறிக்கோளில் 2016 மே 05 ஆந் திகதி புரிந்துணர்வு | விவசாய முகாமைத்துவ தகவல் முறைமையானது விவசாய அமைச்சின் தலைமையில் இடம்பெறுவதுடன் உரிய செலவுகள் விவசாய அமைச்சினூடாக மீளளிப்புச் செய்யப்படும். இது தொடர்பான | தகவல் முறைமையானது நிதிக்கூற்றுக்களில் ஒரு சொத்தாக இனங்காணப்படுதல் வேண்டும். எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை செய்து பயிர் செய்து சேதங்களுக்கான காப்புறுதி இழப்பீட்டினை செலுத்தும் நடைமுறையானது 2 ½ மாதங்கள் வரை குறைப்பதற்கான குறிகாட்டியினை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதி நடைமுறையும் அறிமுகப்படுத்தி கட்டியெழுப்பப்பட்டுள்ள விவசாய முகாமைத்துவ தகவல் முறைமைக்கு ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 20,391,089 நிதி வசதிகளை சபைக்கு வழங்கியிருந்ததுடன் ஆண்டின் இறுதிவரை சபையினால் அதற்காக ரூபா 23,009,698 செலவு செய்திருந்த போதிலும் இந்த முகாமைத்துவ தகவல் முறைமையானது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இழப்பீட்டினை கொடுப்பனவு செய்தல் நடைமுறைமைக்காக தகவல் முறைமை பயன்படுத்தப்படாததனால் செயற்திட்டத்தில் எதிர்பார்த்த குறிக்கோள் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அனைத்து கொடுக்கல் வாங்ககல்களும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கணக்கு குறிப்புக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக பயிர்ச் சேதம் அறிவிக்கப்பட்டிருந்தமை சேதத்தை கண்காணிக்கும் நடவடிக்கை முதலியன தாமதத்துடன் இடம்பெற்றதனால் குறிகாட்டி பெறுபேற்றினை வெளிக்கள கண்காணிப்பு பெறுபேற்றுடன் ஒப்பீடு செய்வதற்கு முடியாதிருந்ததனாலும் வானிநிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவும் அக்கணிப்பீட்டிற்கு இணங்க இழப்பீட்டினைச் செலுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. | வேண்டும். |
| (ஈ) | பயிர்க் காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்புறுதி பூட்கையை பெற்றிருந்த 18 விவாசாயிகளுக்கு சபையின் நிதியிலிருந்து இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்தும் திறைசேரியிடமிருந்தும் பணத்தைப் பெற்று 2021 சிறு போகத்திற்காக ரூபா 336,150 இழப்பீட்டுப் பணம் செலுத்தப்பட்டது. | இழப்பீட்டு ஆவணங்களை கணனிமய்படுத்தும் போது ஏற்பட்ட பிழைகளின் காரணமாக பயிர்ச்செய்கை சேதத்திற்கான காரணம் பிழையாக கணனியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பணத்தை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு உள்ள பணத்திலிருந்து கழித்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்டஅலுவலகங்களுக்கு மீண்டும் அறிவுறுத்தல் பத்திரங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காப்புறுதி பூட்கைகளை பெற்றுக்கொண்டுள்ள விவசாயிகளுக்கு சபையின் நிதியத்திலிருந்து இழப்பீட்டினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சபையின் மாவட்ட அலுவலகங்களினால் காப்புறுதி செய்தவர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட ரூபா 3,284,147 தொகையான தவணைப் பணம் மாவட்ட அலுவலகங்களிலிருந்து கிடைக்க வேண்டிய தவணைப் பணமாக பிழையாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | இப்பணம் திசெம்பர் மாதம் மாவட்ட நிருவாகக் கணக்கினுள் உள்ளடங்கியிருந்த போதிலும் தலைமை அலுவலகத்தின் உரிய திட்டத்தின் கணக்குகளுக்கு பணம் அனுப்பப்பட்டிருந்ததானது அடுத்த கணக்காண்டின் தொடக்க மாதத்தில் என்பதனால் பெறவேண்டிய நிதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | மாவட்ட அலுவலகத்தையும் சபையையும் ஒரே கணக்கு அலகாகக் கருதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | ஒரு தனியார் தொலைத்தொடர்பு கம்பனியிடமிருந்து 2021 ஒக்தோபர் மாதத்தின் போது அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட 10 டெப் இயந்திரங்கள் பொருள் இருப்பு பதிவேட்டில் பதியப்படவோ அல்லது நிதியற்ற சொத்தாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படவோ இல்லை. | உரிய டெப் இயந்திரங்களை இருப்பு பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அன்பளிப்புக்களானது இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு நிதியற்ற சொத்துக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | கடன் மற்றும் நானாவித செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய 02 ஆண்டுகளிலிருந்து 38 ஆண்டுகள் வரை பழமையான ரூபா 1,107,227 முற்பண மீதியினை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம்மீதியினை அறவீடு செய்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டிருந்தும் அதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படுகின்ற இம்மீதிகளை நிதிக்கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு உரிய பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அம்மீதிகளை இக்கணக்காண்டிற்குள்ளேயே நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மற்றும் முற்பணங்களை அறவீடு செய்வதற்குள்ள இயலுமையினை பரீட்சித்துப் பார்த்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் நிச்சயமற்ற முற்பணங்களுக்காக ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் சேவைக்காக விடுவிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தருக்கு 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக சபையினால் செலுத்தப்பட்ட சம்பள பணத்தில் மீளளிப்புச் செய்யப்படாத ரூபா 171,011 பணம் 10 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு இருந்தன. | நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டு இருந்த இம்மீதியை நீக்குவதற்கு உரிய பணிப்பாளர் சபைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அம்மீதிகளை இக்கணக்காண்டிற்குள்ளேயே நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 426,871 தொகையான மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதி நீண்ட காலமாக காணப்படுகின்ற ஒரு மீதி என்பதனாலும் உரிய தரப்பினர்கள் இப்பணத்தை மீண்டும் வேண்டிக் கொள்ளாததனாலும் இப்பணத்தை வருமானத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை முகாமைத்துவ சேவைகள் தரத்திலுள்ள பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையின் 4.3.1 (அ) உப பிரிவு | (i) | காப்புறுதி பிரிவின் உதவிப் பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையின்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்தில் 03 ஆண்டுகள் காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான அனுபவம் | 2021 ஆம் ஆண்டில் வழங்கிய உதவி பணிப்பாளர் நியமணங்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக இடம்பெறவில்லை. சேர்த்துக் கொள்ள்பட்ட உத்தியோகத்தர் நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காப்புறுதி நடவடிக்கைகள் தொடர்பான 03 ஆண்டுகள் அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். | | |
| | | (ii) திட்டமிடல் பிரிவின் உதவி பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க துறையின்/ கூட்டுத்தாபனம் சபை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறவனத்தில் 03 ஆண்டுகள் திட்டமிடல் அல்லது அலுவலக செயற்பாட்டுத் துறையில் அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 03 ஆண்டுகள் வெளிக்கள மற்றும் நிருவாக நடவடிக்கை தொடர்பான அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். | 2021 ஆம் ஆண்டில் வழங்கிய உதவி பணிப்பாளர் நியமணங்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக இடம்பெறவில்லை ல. சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு இணங்க இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திட்டமிடல் அல்லது ஆளணி செயற்பாட்டுத் துறையில் அனுபவமுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றிக்கையின் 2 ஆம் பந்தி | சுற்றிக்கையில் ஏற்பாடுகள் இல்லாதிருந்தும் MM 1-1 சேவைத் தரத்தைச் சேர்ந்த 19 உத்தியோகத்தர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,380,533 போக்குவரத்துப்படி | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2019/05/10 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வரிசை அமைச்சின் செயலாளரிடம் வேண்டப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஒரு தீர்மானத்தினை | சுற்றிக்கையில் உள்ளடக்கப்படாத கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கும் வரை பணிப்பாளர் சபை தீர்மானம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் 2023/03/27 ஆந் திகதிய 3/1/8/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மீண்டும் வரிசை அமைச்சின் செயலாளரிடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1999 இன் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி அதிகாரச் சட்டத்தின் 7(அ) உபபிரிவு | விவசாயிகளுக்கு நிரந்தரத்தன்மையை வழங்குதல் மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களை மேம்படுத்தும் குறிக்கோளுடன் நட்டத்திற்காக அவர்களுக்கு நட்டயீட்டினை வழங்குவதற்காக விவசாயிகளின் பிரதிபலன்களை முன்னிட்டு சபையினால் பேணப்பட்டு வந்த கெதட அருண காப்புறுதி முறைமைக்கு உரிய 8,185 விவசாயிகளுக்கு 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 70,800,200 இழப்பீட்டுப் பணமானது கணக்கு இலக்கம், விவசாயிகளின் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பன பொருந்தியிருக்காததன் காரணமாக வணிக வங்கியின் மூலம் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் உரிய விவசாயிகளை இனங்கண்டு அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு 5 | கொடுப்பனவு நிராகரிக்கப்பட்ட விவசாயிகளுக்கு திருத்திய ஆவணங்களை தயாரித்து அனுப்புமாறு கமநல சேவை நிலையங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் அவ்வாறு கிடைத்த திருத்திய ஆவணங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டுப் பணம் மீண்டும் உரிமை கோராத விவசாயிகளின் மேற்கூறிய ரூபா 70,800,200 பணம் தொடர்ச்சியாக விவசாயிகளால் உரிமை கோரப்படாததனால் விவசாய காப்புறுதி நிதியத்திற்கு மாற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணத்தை கமத்தொழில் தரவு முகாமைத்துவ முறைமையை | விவசாயிகளை இனங்காண்பதற்கு ஒரு நிரந்தர வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | உருவக்குவதற்காக வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. எனினும் அப்பணம் மேற்கூறிய குறிக்கோளுக்காக பணன்படுத்தப்படாத தனால் மீண்டும் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள் ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,440,680,754 மீகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய அண்டிற்கான மிகை ரூபா 1,575,875,061 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 864,805,693 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 937,877,186 ஆல் இழப்பீட்டுக் கொடுப்பனவு குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட் மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021/22 பெரும் போகத்திற்காக 26,904 விவசாயிகளுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணத்தில் ரூபா 10,777,000 தொகை திடீர் விபத்து காப்புறுதி தவணைப் பணம் கழிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் கழிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்குள் திடீர் விபத்து காப்புறுதி பூட்கை வழங்கப்பட வேண்டிய போதிலும் 14,779 விவசாயிகளுக்கு காப்புறுதி தவணைப் பணம் கழித்த திகதியிலிருந்து 7 மாதங்கள் கடந்திருந்தும் காப்புறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2020/2021 பெரும் போகத்திலிருந்து இழப்பீட்டினை செலுத்தும் போது 2017 சுற்றறிக்கையில் குறிப்பிட்ட திடீர் விபத்து காப்புறுதி உறுதியினை வழங்குவதற்கு பணிப்பாளர் சபையின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதனா ல் தற்பொழுது காப்புறுதி உறுதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திடீர் விபத்து காப்புறுதி பூட்கைக்காக சேர்த்துக்கொள்ளப்பட் ட சந்தர்ப்பத்திலேயே காப்புறுதி சான்றிதழினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி உத்தியோகத்தரகள் பதவிக்காக 15 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தததுடன் | நேர்முகப்பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களை சேவைக்கு | நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகளைப் பெற்ற ஒழுங்குமறைப்படி |

| | | |
|---|---|---|
| அந்த ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்கிய ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் 3, 5, 7 மற்றும் 12 ஆம் இடங்களில் பெயர் உள்ள 4 வண்ணப்பதாரர்களைச் சேர்த்துக்கொள்ளாது அதனை விட குறைந்த புள்ளிகளைப் பெற்ற 4 விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர. | அழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அந்த விண்ணப்பதார்கள் சேவைக்கு சமூகமளிக்காமை தொடர்பாக சபைக்கு விளக்கமளிக்க முடியவில்லை. | விண்ணப்பதார்களை சேர்த்தக்கொள்ளுதல் வேண்டுமம். |

## 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| எம்பிலிபிடிய மாவட்ட அலுவலகமும் உத்தியோகபூர்வ இல்லமும் 1998 ஆம் ஆண்டிலிருந்து உடைந்த நிலையிலும் திருத்தம் செய்ய வேண்டிய நிலையிலும் காணப்பட்டன என்று சபையினால் இனங்காணப்பட்டிருந்த போதிலும் திருத்தம் செய்யப்படவில்லை என பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பல ஆண்டுகள் பழைமையானதால் திருத்தம் செய்வதற்காக அதிகளவு பணம் செலவாகும். தற்பொழுது கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக மட்டுப்பாடு விதிககப்பட்டுள்ளதால் இந்நிலைமை உருவாகியுள்ளது. இக்காணிக்கான மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு எம்பிலிபிடிய பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மட்டுப்பாட்டினால் மதிப்பீட்டு அற்ககை பெற்றுக்கொள்ளப்படவில்லை. | அலுவலகம் மற்றும் உத்தியோகபூர்வ இல்லத்தை திருத்தம் செய்து பயன்படுத்துதல் வேண்டும். |